**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081684

1. District : Dharmapuri
மாவட்டம்
PS: V & AC
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No.: 04/AC/2024
மு.த.அ. எண்
Date: 30.05.2024
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018
Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
29.05.2024 at 9.44 hrs,
29.05.2024 at 10.10 hrs &
29.05.2024 at 10.52 hrs

(b) Information Received at PS. Date : 30.05.2024
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 06.00 hrs
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி
Thenkaraikottai to Pappireddipatty road, near Revenue Inspector office, about 35 kms north-east

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Sudhakar
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Tr. Mani
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 39/2024
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Gang man, o/o the AE(O&M), TANGEDCO, Olapalayam, Tiruppur Dt.
தொழில்
(g) Address : D. No. 3/213, Kottapuliyanur Village, Gurubarahalli post, Pappireddipatti Tk, Dharmapuri Dt.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Kathiravan, Village Administrative Officer, Gurubarahalli Revenue Village, Pappireddipatti TK, Dharmapuri Dt

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/05/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.05.2024 at 9.25 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE, V&AC, Dharmapuri. ..................No. எண் ..........

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி .

******

இன்று 30.05.2024-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், குருபரஹள்ளி அஞ்சல், கொட்டாபுளியானூர் கிராமம், கதவு எண்.3/213 என்ற முகவரியைச் சேர்ந்த மணி மகன் திரு.M.சுதாகர் என்பவர் நிலையம் வந்து எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், ஓலப்பாளையம் உதவி மின்பொறியாளர் இயக்கமும் பராமரிப்பும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலகத்தில், 3 ஆண்டுகளாக தடகள பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது சொந்த ஊர் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கொட்டாபுளியானூர் கிராமம் ஆகும். எனது தந்தை திரு.P.மணி, த/பெ.பழனியப்பபிள்ளை அவர்கள் கொட்டாபுளியானூர் கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார். தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், குருபரஹள்ளியை சேர்ந்த வெள்ளைகவுண்டர் மகன்கள் திரு.அண்ணாமலை மற்றும் அவரது தம்பி அருணாசலம் ஆகியோர் அவர்களது பூர்வீக சொத்தான குருபரஹள்ளி கிராம சர்வே எண்கள். 13/6, 13/12, 13/13, 13/8 மற்றும் 13/5 ஆகியவற்றில் உள்ள 2.57 சென்ட் நிலத்தை கொட்டாபுளியானூர் ஊரை சேர்ந்த திருமதி.செல்வராணி வகையாராக்களுக்கு அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.750/1999–ன்படி கிரயம் செய்து கொடுத்துள்ளனர். அந்த சொத்தை திருமதி.செல்வராணி வகையராக்களிடமிருந்து ரூ.1,02,800/–க்கு விலை பேசி எனது தந்தை மணி அவர்கள், கடந்த 25.04.2003-ஆம் தேதி அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1009/2003–ன்படி கிரயம் பெற்றுள்ளார். நாங்கள் கிரயம் பெற்றபிறகு, எங்களது பக்கத்து நிலத்துக்காரர் வெள்ளைகவுண்டர் மகன் அருணாச்சலம் அவர்கள், குருபரஹள்ளி கிராம சர்வே எண். 13/5–ல் உள்ள 1.20 ஏக்கர் நிலத்தையும் மற்றும் சர்வே எண்.13/13 ல் மொத்தம் உள்ள 20 சென்டில் 10 சென்ட் நிலத்தையும், குருபரஹள்ளியைச் சேர்ந்த அண்ணாமலை மனைவி கௌரி என்பவருக்கு அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1547/2007–ன்படி கிரயம் செய்து கொடுத்துள்ளார். அதன்பிறகு, சர்வே எண்.13/13-ல் உள்ள நிலத்தில் கிரயம் பெற்ற 10 சென்ட் நிலத்தை திருமதி.கௌரி, அவரது மகன் வழி பேத்தி காவியதர்ஷினி என்பவருக்கு அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.644/2023–ன்படி தான

செட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார். அதனால் பூபதியின் மகள் காவியதர்ஷினி பெயர், எனது தந்தை மணி பெயருடன் குருபரஹள்ளி சர்வே எண்.13/13, பட்டா எண்.1684–ல் கூட்டாக சேர்க்கப்பட்டுவிட்டது. குருபரஹள்ளி சர்வே எண்.13/13–ல் உள்ள மொத்த நிலம் 20 சென்ட்டும், ஏற்கனவே எங்க அப்பா மணி பெயரில் கிரயம் செய்து கொடுத்ததை மறைத்து அதில் 10 சென்ட் நிலத்தை அருணாச்சலம் என்பவர் கௌரி என்பவருக்கு தவறாக கிரயம் செய்து கொடுத்துள்ளார். ஆகவே, தவறாக பட்டாவில் சேர்க்கப்பட்ட காவியதர்ஷினி பெயரை நீக்ககோரி எனது அப்பா மணி கொடுத்த மனுவின்பேரில், அரூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் இருதரப்பினரையும் அழைத்து விசாரணை செய்து, விசாரணை முடிவில், கிராம கணக்கு மற்றும் வில்லங்க சான்று எதையும் சரிபார்க்காமல் குருபரஹள்ளி பட்டா எண்.1684–ல் எனது அப்பா மணி பெயருடன் பூபதி மகள் காவியதர்ஷினி பெயர் கூட்டாக சேர்க்கப்பட்டுள்ளதை நீக்கம் செய்து, எனது அப்பா மணி பெயரில் ஏற்கனவே இருந்தவாறு தனிபட்டாவாக வைத்து ஆணையிட்டுள்ளார். அதன்பேரில், கிராம கணக்கில் காவியதர்ஷினி பெயரை நீக்கம் செய்ய, எனது அப்பா மணி பெயரில் 28.05.2024–ம் தேதி மண்டல துணை வட்டாட்சியர், பாப்பிரெட்டிப்பட்டி அவர்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். பின்னர் 29.05.2024–ம் தேதி காலை 09.44 மணிக்கு குருபரஹள்ளி கிராம நிர்வாக அலுவலர் திரு.கதிரவன் அவரது செல்போன் எண்.6382969361–லிருந்து எனது செல்போன் எண்.8838930952–க்கு போன் செய்து காவியதர்ஷினி என்பவரின் பெயரை நீக்கம் செய்து தனிபட்டா கேட்டு ஆன்லைன் மூலம் விண்ணபித்துள்ளீர்கள். அதற்கான பத்திர நகல் மற்றும் அரூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் ஆணை நகல் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தென்கரைகோட்டை ஆர்.ஐ ஆபிஸ் அருகில் உள்ள தானியமண்டி பக்கம் வருமாறும், பெயர் நீக்கம் செய்ய ரூ.2,000/–ம் தனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு நான், காங்கேயத்தில் இருப்பதாகவும், அவ்வளவு பணம் என்னிடம் இல்லையென்றும், எனது அப்பா மணி அவர்களை அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தேன். அதற்கு அவர் ரூ.2,000/–த்தில் ரூ.1,000/– குறைத்து ரூ.1,000/–ம் கொடுக்கும்படி தெரிவித்தார். எனது அப்பா மணி தோட்டத்தில் வேலையாக இருப்பதாக தெரிந்தது. பின்னர் 10.10 மணிக்கு மீண்டும் திரு.கதிரவன் எனக்கு போன் செய்து தான் தென்கரைகோட்டை ஆர்.ஐ ஆபிஸ் அருகே வந்துவிட்டதாகவும், உங்க அப்பாவை அனுப்பிவிட்டாயா என்று கேட்டார். அதற்கு நான், அப்பா தோட்டத்தில் வேலையாக இருக்கிறார் என்றும், நாளை ஆபிஸ் அனுப்பிவைக்கிறேன் என்றும் தெரிவித்தேன். அதற்கு அவர், இப்ப ரூ.1,000/–ஐ கூகுள் பே பண்ணிவிடு, உனது

வேலையை முடித்துவிடுகிறேன் என்று சொன்னார். பின்னர் 10.52 மணிக்கு மீண்டும் திரு.கதிரவன் எனக்கு போன் செய்து தான் கேட்ட பணம் ரூ.1,000/– ஐ கூகுள் பே பண்ணிட்டியா என்று கேட்டார். அதற்கு நான், என்னிடம் தற்போது பணம் இல்லையென்று சொன்னேன். அதற்கு அவர் நாளை 30.05.2024–ம் தேதி காலை 10.00 மணிக்கு தென்கரைகோட்டை வந்து அவருக்கு போன் செய்யுமாறும், அப்போது அவர் சொல்லும்விதம் அவர் கேட்ட பணத்தை கொடுக்குமாறும் தெரிவித்து போனை வைத்துவிட்டார். எனவே அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.1,000/–த்தை கொடுத்து, எனது அப்பா மணி பெயரில் உள்ள குருபரஹள்ளி வருவாய் கிராம பட்டா எண்.1684–ல் கூட்டாக சேர்க்கப்பட்டுள்ள பூபதி மகள் காவியதர்ஷினி பெயரை நீக்கி, தனிபட்டா பெற எனக்கு விருப்பமில்லை. அதனால், இன்று 30.05.2024–ம் தேதி வியாழக்கிழமை அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.1,000/–த்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் குருபரஹள்ளி கிராம நிர்வாக அலுவலர் திரு.கதிரவன் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் ம.சுதாகர், 30.05.2024. Sir, Received a computer typed written report on 30.05.2024 at 06.00hrs and further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of the accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.04/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 30.05.2024 at 06.30 hrs against the accused Tr.Kathiravan. The original FIR and the complaint of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

30/05/2024

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.